# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM ජේසියම්



WELLA HAIR DRESSING

WELLA வெலா சலூன்

Ladies & Gents

FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.

Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023



குரல் - 65 | 24.05.2023 (புதன்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00


## இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழர்களை பாதுகாத்ததாக புதுக்கதை விடும் அரசு



பக்கம் 5

இறுதி கட்ட யுத்தத்தின் போது 295,000 தமிழர்களை பாதுகாத்தே இறுதிகட்ட யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.



பக்கம் 5

## தீர்வுத்திட்ட தயாரித்தலின் பின்னரே அரசியல் தீர்வு பற்றி பேச்சு: சம்பந்தனுக்கு ரணில் பதிலடி

## சிறீதரன் மீண்டும் யுத்தத்தை தூண்டுகிறார்: சபையில் சிங்கள எம்.பி கூச்சல்



பக்கம் 5

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தகாலத்தை போன்றதொரு நிலை மீண்டும் நாட்டில் உருவாகக்கூடாதென தமிழ் மக்கள் விரும்புவதாகவும் ஆனால் சிறீதரன் போன்ற அரசியல்வாதிகள் அதனை மீண்டும் உருவாக்க முயற்சிப்பதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற



பக்கம் 5

# நீரே வராத மகாவலி ஆற்றுத்திட்டத்திற்கு புதிய வலயம் எதற்கு?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி?

## பதவிக்காகவே தமிழ் தேசியம் பகிரங்கமாக கூறும் மணிவண்ணன்



பக்கம் 5

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி வெறிக்காக கொள்கை என்ற வார்த்தையை வெளிப்படுத்துவதாகவும், தாய்நில போராட்டத்திற்காக உயிர்நீத்தவர்களை வைத்து பதவிக்காக தமிழ் தேசியம் பேசுகின்றார்கள் என்றும் யாழ். மாநகர சபையினுடைய முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கொண்டவாறு தெரிவித்தார்.



பக்கம் 5

## தையிட்டி ஆக்கிரமிப்பு விகாரைக்கு எதிராக போராடிய 9 பேர் கைது: பொலிசாருக்கு தனித்து நின்று தண்ணி காட்டும் கஜேந்திரன் எம்.பி!

யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில் சட்டவிரோதமாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள விகாரையை , அகற்ற கோரி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்ட சட்டத்தரணி சுகாஷ் , நான்கு பெண்கள் உள்ளிட்ட 09 பேர் பலவந்தமாக தூக்கி ஏற்றி பலாலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இதுவரை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவில்லை.

## அபிவிருத்திக்குழு கூட்டங்களில் மக்கள் சார்ந்த விடயங்களிற்கு உடனடியாக முடிவெடுக்கப்படுவதில்லை - செல்வம் எம்.பி குற்றச்சாட்டு..!



அபிவிருத்திக்குழு கூட்டங்களில் மக்கள் சார்ந்த விடயங்களிற்கு உடனடியாக முடிவெடுக்கப்படுவதில்லை, இது தொடர்பில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் கவனமெடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். மேலும் கூறுகையில், மின்சார கட்டண விடயத்தில் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் நியாயமாக நடந்துள்ளதுடன் அவரது கடைமையை சரியாக செய்துள்ளார்.

அரசாங்கம் மின்சார கட்டணத்தை அதிகரித்ததுடன், அது தொடர்பாக சரியான வழிமுறைகளை கையாளாத சூழ்நிலையில் அவர் தனது எதிர்ப்பை தெரிவித்தார்.

பக்கம் 7

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதில் என்ன சிக்கல்? காரணத்தை வெளியிட்டு உண்மையை ஒப்புக்கொண்ட அமைச்சர்..!



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் தற்போது 46 பேர் மாத்திரமே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் 45 ஆண்களும் ஒரு பெண்ணும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ர்ஸ் நிர்மலநாதன் சபையில் எழுப்பிய



பக்கம் 7

தேசியம்

மற்றொரு மே 18ம் கடந்து போய்விட்டது. இது பதினாலாவது மே18. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த 14 ஆண்டுகளில் தமிழ் அரசியல் எதுவரை முன்னேறியிருக்கிறது? அல்லது எங்கே தேங்கி நிற்கிறது?

மே 18ஐத் தமிழ்த்தரப்பு எவ்வாறு அனுஷ்டிக்கிறது என்பதிலிருந்தே ஒரு மதிப்பீட்டுக்கு வரலாம். அது ஒரு தேசிய துக்க தினம் என்று தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் சில பகுதிகளைத் தவிர ஏனைய தமிழ்ப் பகுதிகளில் வாழ்க்கை வழமைபோல இயங்கியது. பாடசாலைகள் இயங்கின. அலுவலகங்கள் இயங்கின. பாடசாலைகளில் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் நடந்தன: வெளிக்களப்பயிற்சி நிலையைப் பரீட்சைகள் நடந்தன.

ஒரு தொகுதி மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி போய்க்கொண்டிருக்க, எனையவர்கள் தமது அன்றாடத் தொழில்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். தமிழ்ப் பகுதிகளில் ஆங்காங்கே கஞ்சி காய்ச்சி கொடுக்கப்பட்டது. கஞ்சி காய்ச்சும் நிலையங்களைக் கடந்து போனவர்கள் ஆங்காங்கே கஞ்சியை வாங்கி குடித்தார்கள். பின்னர் வீட்டுக்குச் சென்று வழமையான மதிய உணவை அருந்தினார்கள். அதாவது சித்திரைக் கஞ்சியை குடிப்பதுபோல விரதமிருந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு விரத உணவாக அருந்தியவர்கள் எத்தனை பேர்?

மே 18க்கு முதல் நாள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அந்த நாளை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் கடைகளை மூடுமாறும் பாடசாலைகளை மூடுமாறும் அழைப்பு விடுத்தது. ஒரு தேசிய துக்க தினத்தை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்று அதற்கு முதல் நாள்தான் ஒரு கட்சி மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது என்றால் நிலைமை எப்படியிருக்கிறது?

ஒரு தேசிய துக்க தினத்தன்று, தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் துக்கத்தை அனுஷ்டிக்க, பெரும்பகுதியினர் தமது வழமையான அன்றாடச் சோலிகளுக்குள் மூழ்கிக் கிடந்தார்கள். அப்படியென்றால் அதை ஒரு தேசிய துக்கதினம் என்று அழைக்கலாமா?

கடந்த வியாழக்கிழமை முள்ளிவாய்க்காலில் மொத்தம் 2000க்கும் குறையாதவர்கள் கூடினார்கள் என்று ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள். பல்கலைக்கழக மாணவர்களும் அப்படித்தான் கூறுகிறார்கள். பொதுக் கட்டமைப்பினர் கிட்டத்தட்ட 4,000 பேர் வரை கூடினதாக கூறுகிறார்கள். தாங்கள் மொத்தம் 1500 தீப்பந்தங்களை நட்டு வைத்ததாகவும்,ஆனால் அதைவிட அதிகமான தொகையினர் அங்கு கூடியிருந்ததாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி வருவதற்கு பொதுவான ஏற்பாடுகள் எவையும் இருக்கவில்லை. நடைமுறையில் உள்ள பொதுக் கட்டமைப்பானது நினைவு கூர்தலுக்கான பொது இடத்தை நிர்வகிப்பதற்கும் அப்பால் மக்களைத் திரட்டும் வேலைகளை செய்யவில்லை. அக்கட்டமைப்பில் சில கத்தோலிக்க மதகுருக்களும் செயற்பாட்டாளர்களும் உண்டு. ஓர் அங்லிகன் மதகுரு கட்டமைப்பை வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும், பரந்துபட்டதாகவும் மாற்ற வேண்டும் என்று முயற்சித்திருக்கிறார். திருகோணமலையைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவரும் அவ்வாறு கேட்டிருக்கிறார். பல்கலைக்கழக மாணவர் அமைப்பினரும் கேட்டிருக்கிறார்கள். அதுதொடர்பாக கலந்துரையாடுவதற்கு மெய்நிகர் சந்திப்பு ஒன்றை ஒழுங்குபடுத்துவதாக கூறியிருக்கிறார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

நிலாந்தன்



# மதில் மேல் இருக்கும் ஆமைகள் ?

இந்த விவகாரத்தை நான் மே 18க்கு முன்னரே எழுத யோசித்தேன். ஆனால் இருக்கின்ற அமைப்பைக் குழப்பக்கூடாது என்பதோடு, துக்கத்தை அனுஷ்டிக்கப்போகும் மக்கள் மனதில் சலிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவும் அவ்வாறு எழுதுவதைத் தவிர்த்தேன். பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்க மதகுருவோடும் நான் உரையாடினேன். அவர் அதனை ஜனநாயக மயப்படுத்த வேண்டிய தேவையை ஏற்றுக்கொண்டார். ஆனால் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டினார். பரந்துபட்ட அளவில் அதை விஸ்தரிக்கும் பொழுது அதற்குள் யார் யார் வருவார்கள் என்ற பயம் உண்டு என்று சொன்னார். எனினும், இப்போதுள்ள பொதுக் கட்டமைப்பு வெளிப்படைத் தன்மையற்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது.

> **“தமிழ் மக்களின் தேசத்திரட்சி சிதறிபோக ஒன்று, வெளியில் இருந்து தமிழ் அரசியலை ரிமோட் கொன்ட்ரோல் செய்ய முடியும் என்று நம்பும் புலம்பெயர்ந்த தரப்புகள். இரண்டாவது, தமிழ் மக்களின் தேசத் திரட்சியை சிதறடிப்பதன்மூலம் அரசியல் ரீதியாக தமிழ்மக்களை முழுமையாக தோற்கடிக்க விரும்பும் சக்திகள். மூன்றாவது தமிழ்க் கட்சிகள் செயற்படுகின்றன.”**

முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பை மட்டுமல்ல நினைவு கூர்தலுக்காக ஏற்கனவே உள்ள பொதுக்கட்டமைப்புகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அக்கட்டமைப்புகளின் பின்னணி குறித்தும், அதை யார் பின்னிருந்து இயக்குகிறார்கள் என்பதை குறித்தும் அக்கட்சிக்கு சந்தேகம் இருப்பதாக தெரிகிறது.

தமிழரசியலில் சூழ்ச்சிக் கோட்பாடுகளை அதிகம் புனையும் ஒரு கட்சி அது. ஆனாலும், தமிழ் அரசியலில் இப்பொழுது யார் யாரோடு நிற்கிறார்கள்? யாருக்கு யார் காசு கொடுக்கிறார்கள்? யாரை யார் ரிமோட் பண்ணுகிறார்கள்? என்று சந்தேகப்படும் அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை அதிகரித்து வருகிகிறது என்பது உண்மைதான்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி ரொட்ரிகோ மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை, மாவட்ட மக்கள் அமைப்பு என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அந்நிகழ்வுக்கு ஆட்களைத் திரட்டியது படைப் புனாய்வுத் துறைக்கு நெருக்கமானவர்கள் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதுபோல வவுனியா நகரசபை மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவுநிகழ்வை வன்னித்தமிழர் ஒன்றியம் என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அதற்கு வவுனியா விகாராதிபதி நிதியுதவி செய்திருக்கிறார். அதாவது தமிழ் அரசியல் பரப்பில் ஒரு மையம் இல்லாத காரணத்தால் ஒரு பலமான திரட்சி இல்லாத காரணத்தால், யார் எதைச் செய்கிறார்கள்? யாரை யார் இயக்குகிறார்கள்? என்பவற்றைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை உருவாகி வருகிறதா?

தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உடைக்க வேண்டும் குழப்ப வேண்டும் என்று திட்டமிட்டு பல்வேறு வகைப்பட்ட தரப்புக்களும் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் செயற்படுவதாகத் தெரிகிறது.

ஓர் ஆபிரிக்க பழமொழி உண்டு “ஆமை மதில் மேல் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு யாரோ உதவியிருக்கிறார்கள் என்று பொருள்”. தமிழரசியலில் இப்பொழுது பல ஆமைகள் மதில் மேல் இருக்கின்றன. ஏன் கூரை மேலும் இருக்கின்றன. அந்த ஆமைகளை யார் அங்கே தூக்கி வைத்தது என்ற கேள்வி உண்டு. சில ஆமைகள் ஒரே சமயத்தில் இரு வேறு தரப்புக்களிடம் சம்பளம் வாங்கி வருவதாக பரவலாகச் சந்தேகங்கள் உண்டு.

இது சந்தேகம்தான்.இந்த இடத்தில் இதைப்பற்றிக் கதைக்க வேண்டும். ஏனென்றால், நவீன தமிழ் அரசியலில் ஏற்பட்ட ஒரு கூட்டுப் பேரழிவை நினைவு கூர்ந்து முடித்திருக்கும் இக்காலகட்டத்தில் பேசவில்லை என்றால் பிறகு எப்பொழுதும் அதைப்பற்றிப் பேச முடியாது.

தமிழ்மக்களின் தேசத்திரட்சி சிதறிப்போன தன் பின்னணியில்தான் இவ்வாறான சந்தேகங்கள் எழுகின்றன.இந்த சந்தேகங்களுக்கு இரண்டு தரப்புகள் பொறுப்பு. ஒன்று, வெளியில் இருந்து தமிழ் அரசியலை ரிமோட் கொன்ட்ரோல் செய்ய முடியும் என்று நம்பும் புலம்பெயர்ந்த தரப்புகள். இரண்டாவது, தமிழ் மக்களின் தேசத் திரட்சியை சிதறடிப்பதன்மூலம் அரசியல் ரீதியாக தமிழ்மக்களை முழுமையாக தோற்கடிக்க விரும்பும் சக்திகள். மூன்றாவது தமிழ்க் கட்சிகள்.

இதில் புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்புகள் நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் உதவிகளைச் செய்கின்றார்கள். ஆனால் அவர்களை அறியாமலேயே அந்த உதவிகள் தமிழரசியற் பரப்பில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. ஓர் இனப்படுகொலைக்குப் பின் தப்பியிருக்கும் மக்கள் என்ற அடிப்படையில் தாயகத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான செயற்பாட்டாளர்களே உண்டு. அவர்களையும் ரிமோட் செய்ய முற்பட்டால், அது அவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் வேட்டைப் பற்களுக்குள் சிக்கவைத்துவிடும் என்பது முதலாவது பயம். இரண்டாவது பயம், வெளியில் இருந்து கிடைக்கும் உதவிகளுக்காக செயற்படுகின்றவர்கள் ஒரு கட்டத்தில் தாமாகச் செயற்பட முடியாத பொம்மலாட்டப் பொம்மைகளாக மாறிவிடுவார்கள். பொம்மைகளால் தேசத்தைத் திரட்ட முடியாது. ஆமைகளாலும் தேசத்தைத் திரட்ட முடியாது.

பொம்மைகளும் ஆமைகளும் தமிழரசியல் பரப்பில் அதிகரித்துவரக் காரணம் அரங்கில் உள்ள தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களுந்தான். எல்லாருக்கும் இதில் கூட்டுப் பொறுப்பு உண்டு. இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் ஒரு தேசத்திரட்சியைக் கட்டியெழுப்பத் தவறிய அனைவருக்கும் இதில் பொறுப்பு உண்டு. தமிழ்மக்கள் மத்தியில் ஒரு தேசத்திரட்சியை கட்டியெழுப்பும் மக்கள் இயக்கமும் கிடையாது குடிமக்கள் சமூகமும் கிடையாது கட்சிக் கூட்டுக்களும் கிடையாது. அதனால் கடந்த 14ஆண்டுகளாக தமிழ் மக்கள் அவிழ்த்து விடப்பட்ட பாக்கு மூட்டை போல சிதறிக்கொண்டே போகிறார்கள்.

தமிழ் இளையோர் எப்படி நாட்டை விட்டு வெளியேறுவது என்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இது, முள்ளிவாய்க்காலில் கடைசிக்கட்டத்தில் எந்த வழியால் தப்பிச் செல்வது என்று சிந்தித்ததைப்போல இருக்கிறது என்று ஒரு செயற்பாட்டாளர் துக்கப்பட்டார்.

சிங்கள பௌத்த மயமாக்கல் நிலப்பறிப்பு பயங்கரவாத தடைச் சட்டத்தை புதுப்பிப்பது தமிழ் மக்கள் மத்தியில் குழந்தைப்பேறு குறைந்துவருவது இளையோர் நாட்டை விட்டு வெளியேறத் துடிப்பது போன்றவற்றின் பின்னணியில், தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட யாருமே இல்லை. ஆம், யாருமே இல்லை.

அந்த வெற்றிடத்தில்தான் கடந்த 14ஆண்டுகளாக, ஒரு பேரிழப்பை அனுஷ்டிப்பதற்காக பரந்துபட்ட அளவிலான, வெளிப்படைத் தன்மைமிக்க ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கமுடியாத மக்களாகத் தமிழ்மக்கள் காணப்படுகிறார்கள்.

மன்னாரில் இந்துக்கள் கட்டிய வளைவு உடைக்கப்பட்ட பின் அது தொடர்பில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான உரையாடலை தொடக்கி வைப்பதற்கு ஒரு சிவில் சமூகம்கூட தமிழ்மக்கள் மத்தியில் கிடையாது. வடக்கு கிழக்கு இணைப்பு அதிகம் சோதனைக்குள்ளாகி வரும் இக்காலகட்டத்தில் அதுதொடர்பில் வெளிப்படையான உரையாடலைத் தொடங்கி, கிழக்கில் இருக்கக்கூடிய சந்தேகங்களை நீக்குவதற்கு யார் முயற்சிக்கிறார்கள்? சாதி ரீதியாக பிற்படுத்தப்படும் மக்களின் அச்சங்களைப் போக்குவதற்குரிய தமிழ்த் தேசிய வேலைத் திட்டம் யாரிடம் உண்டு?

தமிழ்மக்களை வெளித்தரப்புகள் பிரிக்கப் பார்க்கின்றன, வெளித்தரப்புகள் ஆமைகளையும் பொம்மைகளையும் சம்பளம் கொடுத்து இயக்குகின்றன என்று குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. பதிலாக தேசத்திரட்சியை உறுதிப்படுத்த வேண்டும் பலப்படுத்த வேண்டும். அதைச் செய்யத் தவறிய அனைத்துக் கட்சிகளும் ஏதோ ஒரு விகிதளவுக்கு எதிரிக்கு சேவகம் செய்திருக்கின்றன.

தமிழ் மக்கள் வடக்கு கிழக்காய்கட்சியாய் பொதுக் கட்டமைப்பாய் சாதியாய் சமயமாய் சிதறிக்கொண்டே போகிறார்கள். இது தமிழ் மக்களைப் பிரித்துக் கையாள முற்படும் சக்திகளுக்கே அதிகம் வாய்ப்பானது.தமிழ் மக்களைக் கூறு போடுவதற்கு ஆமைகளும் பொம்மைகளும் தேவையில்லை. தமிழ்க் கட்சிகளே போதும் என்பதுதான் கடந்த 14 ஆண்டுகால அனுபவம்.

# தமிழர் தாயகத்தில் பொலிசாரின் அராஜகங்களுக்கு வன்மையான கண்டனம் - தர்மலிங்கம் சுரேஸ்




தமிழ் தாயகத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரை அகற்ற கோரி போரட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிசார் கண்மூடித்தனமாக மிருகத்தனமான தாக்கி 9 பேரை கைது செய்த அராஜகத்தை வன்மையாக கண்டிப்பதுடன் வடகிழக்கில் விகாரை அமைப்பு காணி அபகரிப்புக்கு எதிராக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டம் தொடரும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள கட்சி காரியாலயத்தல் நேற்று செவ்வாய்க்கிழமை(23) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

தையிலிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை திறக்கப்படவுள்ள நிலையில் அதனை அகற்றக் கோரி கட்சி பொதுசெயலாளரும் பா.உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் கட்சி உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் காணி உரிமையானர்கள் பொதுமக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன் போது இலங்கை அரசின் பொலிசார் மிக மோசமாக அவர்களை தாக்கியதுடன் சட்டத்தரணி சுகாஷ், திலீபன், தீசன், ராஜீப், சுதாகரன், கோபி, சற்குணதேவி, தமிழ்மதி, ராஜீ கலைவாணி உட்பட 9 பேரை பலாலி பொலிசார் கைது செய்துள்ளனர்.

உண்மையிலே இந்த நாட்டிலே ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் தாயத்தில் விகாரைகள் முளைக்க ஆரம்பித்துள்ளது கடந்த வாரம் திருகோணமலையில் தமிழர்களுக்கு சொந்தமான முருகன் ஆலையத்துக்கு சொந்தமான காணியில் தாய்லாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட புத்தர் சிலை வைக்க ஏற்பாடு செய்தனர். அதற்கு எதிராக மக்களுடன் ஒன்றினைந்து போராடி அதனை தற்காலிகமாக தடுத்து வைத்திருக்கின்றோம். அதேபோன்று வடக்கு கிழக்கில் விகாாரை அமைப்பது மற்றும் காணி அமைக்கும் செயற்பாடுகளும் துரித கதியில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது எனவே தமிழர் தாயத்தில் காணி அபகரிப்பு விகாரை அமைப்பது போன்றவற்றை முற்று முழுதாக எதிர்ப்போம்

தமிழ் தாயகம் ஒரு மரவு வழிதாயகம் வடக்கு கிழக்கில் தமிழர்கள் முஸ்லீம் மக்கள் வாழுகின்றனர் அவர்களுடைய வணக்கஸ்தலங்கள் இடிக்கப்பட்டு அதிலே விகாரையை அமைப்பதாக இருந்தால் இந்த நாட்டின் அரசின் இலக்கு என்ன? என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.
தமிழ் தாயகத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள குருந்துார் விகாரை, தையிட்டி விகாரை, திருகோணமலை வில்லூன்றி முருகன் ஆலயத்தில் புத்தர் சிலை வைப்பது மன்னார் உயிலங்குளத்தில் விகாரை அமைப்பது போன்ற நடவடிக்கைகைகைவிடப்படவேண்டும.

அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் பல்வேறு இடங்களில் புத்தர் சிலை அமைக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் தொல்லியல் இடங்கள் என்ற பேர்வையில் தமிழ் மக்கள் காணிகள் இலக்கு வைக்கப்பட்டு அபகரிக்கப்படும் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது எனவே இவைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்

இலங்கை வங்கரோத்து நிலைக்கு சென்றபோது இந்தியா உட்ப பல நாடுகள் கண்மூடிக் கொண்டு உதவிகளை செய்திருக்கின்றனர். தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனழிப்பு யுத்தமே இந்த நாடு இந்த கடன் சுமைக்கு போயுள்ளது.

எனவே இந்த நாடு கடன் இல்லாத நாடாக மாற்ற வேண்டுமாக இருந்தால் தமிழ் சிங்கள மக்களுக்கு இடையிலான இன முரன்பாடு நீக்கப்படவேண்டும் தமிழ் மக்களின் தேசம் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டால் மட்டும் தான் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியும் என்பதுடன் தமிழ் மக்களுக்கு ஒரு தேசம் அங்கீகரிக்கப்படும்வரை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டம் தொடரும் என்றார்.

# இணைந்த வடக்கு கிழக்கில் மீளப் பெற முடியாத சமஸ்டி தீர்வே தேவை!

## காரைதீவு செயலமர்வில் ஏகமனதாக தீர்மானம்.



ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மீளப்பெற முடியாததும் சமஷ்டி முறையிலானதுமான தீர்வினை வழங்க வேண்டும் எனும் மக்கள் பிரகடனம் தொடர்பாக தெளிவுபடுத்தும் செயலமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (22) காரைதீவில் இடம் பெற்றது.

இச் செயலமர்வு வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் அகம் மனிதாபிமான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது. செயலமர்வில் உரையாற்றிய அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா "கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான தீர்வினை நோக்கிய 100 நாள் செயற்பாட்டு திட்டத்தின் இறுதிநாளில் வெளியிடப்பட்ட மக்கள் பிரகடனம் தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளை வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் அகம் மனிதாபிமான வள நிலையம் மேற்கொண்டு வருவதாகவும் இதன்மூலம் தமிழ்பேசும் மக்கள் உட்பட வடக்குக்கிழக்கில் வாழும் மக்கள் கௌரவமாக வாழ வழி சமைக்கும் "எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு இந் நிகழ்வில் அம்பாரைமாவட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் சமூக நலன்விரும்பிகள் பெண்கள் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்கள் யுவதிகள் 150 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளையும் முன்வைத்தனர் இதன்போது.அகம் மனிதாபிமான வளநிலயத்தின் பிரதி இணைப்பாளர் அழகுராசா.மதன் அவர்களும் வரைவு தொடர்பான தெளிவூட்டலை வழங்கியதுடன் அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பும் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் நிறுவனமும் நிகழ்வு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

# முஸ்லிம் திருமண சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு

## முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டாம் : ஐக்கிய காங்கிரஸ்



முஸ்லிம் திருமண சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் எத்தகைய முயற்சிகளுக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டாம் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது பற்றி அக்கட்சி தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்திருப்பதாவது,

முஸ்லிம் திருமண சட்டத்தை திருத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் இருபது பெண்களை நீதி அமைச்சர் அழைத்து அவர்கள் கோரிக்கையை ஏற்கவேண்டும் என முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த நாட்டில் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்கள் வாழும் போது வெறும் இருபது பெண்களின் கோரிக்கைக்கு பின்னால் நீதி அமைச்சர் செல்வதன் மூலம் இதன் பின்னணியில் சியோனிஸம் இருக்கிறதா என்ற சந்தேகத்தை தருகிறது.

சில வருடங்களுக்கு முன் முஸ்லிம் திருமண சட்டத்தை திருத்த வேண்டும் என கோரிக்கை விடுத்த முஸ்லிம் பெண் எழுத்தாளர் ஒருவர் தனது திருமணத்தை விவாகரத்து செய்து விட்டு தற்போது ஐரோப்பாவில் திருமணத்துக் கப்பால் லீவிங் டு கெதர் என வாழ்வதையும் அதை பெருமையாக சமூக வலையத்தளங்களில் பதிவிடுவதையும் காண்கிறோம்.

முஸ்லிம் திருமண சட்டத்தை மாற்றும் கோரிக்கைகளுக்கு பின்னால் ஐரொப்பிய சக்திகள் உள்ளன. இவ்வாறு கோரிக்கை விடுவோரில் சிலரை ஐரோப்பிய நாடுகளின் நிறுவனங்கள் அழைத்து சலுகைகள் வழங்குவதன் மூலம் இவை தெளிவாகிறது.

இந்த நிலையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் பத்து வருடங்களாக பாராளுமன்றில் உண்டும், உறங்கியும் வாழ்ந்து சமூகத்தின் எந்தவொரு உரிமையையும் பெற்றுத்தரவக்கில்லாதவர்களாக இருக்கும் நிலையில் எமது மூதாதையர் பெற்றுத்தந்த முஸ்லிம் திருமண சட்டத்தில் கை வைத்து அதனை எதிர்காலத்தில் இல்லாமல் செய்யும் துரோகத்துக்கு ஒத்துழைக்க வேண்டாம் என கோருகின்றோம்.

முஸ்லிம் திருமண சட்டத்தில் கை வைக்க முயன்ற கோட்டாபய ராஜபக்ஷ மிக கேவலமாக நாட்டை விட்டு தப்பியோடியதை கண்டோம். அதே போல் முஸ்லிம் திருமண சட்டத்தில் ஜம்மிய்யத்துல் உலமாவின் ஏகோபித்த அனுமதி இன்றி திருத்தம் கொண்டு வர முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயன்றால் நிச்சயம் அவர்களுக்கும் இறை தண்டனை கிடைக்கும் என்பதுடன் எதிர் கால நமது சந்ததிகள் பதுவா செய்து சபிப்பார்கள் என்பதை எச்சரிக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# டெங்குத் தாக்க தீவிரத்தன்மையை கட்டுப்படுத்தும் பரிசோதனை நடவடிக்கை முன்னெடுப்பு!



திருகோணமலை மாவட்டத்தில் டெங்குத் தாக்கத்தின் தீவிரத்தன்மையை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு நுளம்பு பரிசோதனை நடவடிக்கைக்கள் கடந்த இரு வாரங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. முரளிதரனின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் அறிவுறுத்தல்களுக்கினங்க திருகோணமலை சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள எல்லாப் பிரதேசங்களிலும் டெங்கு நுளம்பு பரிசோதனை நடவடிக்கைக்கள் கடந்த இரு வாரங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக, திருகோணமலை ஜமாலியா பிரதேசத்தில் நேற்று (23) காலை 8.30 மணியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த பரிசோதனை நடவடிக்கைக்களின்போது, பல இடங்கள் பார்வையிடப்பட்டதுடன், டெங்கு நுளம்பின் தாக்கம் தொடர்பாகவும், அதனால் ஏற்படும் பாதிப்புக்கள், உயிரிழப்புகள் பற்றிய அறிவுருத்தல்கள் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
+94 76 567 3339

## கிழக்கு கல்வி அபிவிருத்தியில் ஆளுநர் செந்தில் தொண்டமானின் பங்களிப்பு அளப்பரியதாக அமையும் –கல்முனை வலய அதிபர் சங்கம் நம்பிக்கை



கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தியில் புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானின் பங்களிப்பு அளப்பரியதாக இருக்கும் என கல்முனை கல்வி வலய அதிபர் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

புதிய ஆளுநருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து, சங்கத்தின் சார்பில் தலைவர் இஸ்ட்.அஹமட், செயலாளர் ஏ.ஜி.எம்.றிசாத் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது

கடந்த காலங்களில் இந்திய வம்சாவளிய மக்களின் பாதுகாப்புக் கவசமாக இருந்து செயல்பட்ட சௌவமியமூர்த்தி தொண்டமானின் வழித் தோன்றலில் வந்த செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாணத்துக்கு புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டமையானது கிழக்கு மாகாண மக்களுக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

இதன் ஊடாக கிழக்கு மாகாணம் பாரிய அபிவிருத்திகளை சந்திக்க வாய்ப்புகள் உள்ளது. இவ்வாறான இளம் தலைவர்கள் எமது பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு மட்டுமல்லாமல் மக்களின் உரிமைகளையும் வென்றெடுப்பதிலும் பாரிய பங்களிப்பை செய்வார்கள்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் செந்தில் தொண்டமானின் பங்களிப்பு அளப்பரியதான அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் ஊடாக பாடசாலைக் கல்வியானது உயர்வான இடத்திற்கு செல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறன.

இந்நியமனத்தை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கல்முனை வலய அதிபர் சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது- என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாடசாலைக்கு இரண்டரை லட்சம் ரூபாய் பெறுமதியான ஒலிபெருக்கி உபகரணங்கள் அன்பளிப்பு.



சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்திற்கென ஒலிபெருக்கி உபகரணங்களை பாடசாலை அபிமானியொருவர் நேற்று வழங்கினார்.

இவ் உபகரணங்களை நாவிதன் வெளியை வசிப்பிடமாக கொண்ட தனவந்தரும் கொடையாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான இந்திரன் ரூபசாந்தன் வழங்கி வைத்தார்.

பாடசாலை அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரனிடம் பாடசாலைக்கான Box, mike, stand ஏனைய சகல உபகரணங்களையும் 250000 (இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு) இற்கு கொள்வனவு செய்து வழங்கி வைத்த நிகழ்வு சிரேஸ்ட ஆசிரியர் ந.கோடீஸ்வரனின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

நாவிதன்வெளியை வசிப்பிடமாக கொண்ட தனவந்தரும் கொடையாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான இந்திரன் ரூபசாந்தன் அவர்களை இத்தருணத்தில் அதிபர் பிரதி அதிபர் பகுதித்தலைவர்கள் ஆசிரியர்கள் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் கல்விசாரா ஊழியர்கள்பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பழைய மாணவர்சங்கம் சார்பில் மனதார வாழ்த்தினார்கள்.

## இனப்படுகொலையை அதன் விளைவுகளை மட்டும் ஆராய்ந்து நிறுவினால் போதுமா அல்லது நோக்கத்தை நிரூபிப்பது அவசியமா?

**இனப்படுகொலையின் பின்னணியில், உள்நோக்கம் வெளிப்படுத்தப்பட வேண்டுமா அல்லது அதன் விளைவுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இனப்படுகொலையை நிறுவுவது போதுமானதா? என்பது குறித்து தொடர்ந்து விவாதங்கள் நடந்து வருகின்றன.** இனப்படுகொலைக்கான பொதுவான வரையறை, இஸ்ரேல் டபிள்யூ. சார்னியால் முன்மொழியப்பட்டபடி, பல நிராயுதபாணியான நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்ற உண்மையை மையமாகக் கொண்டுள்ளது. இந்த வரையறை படுகொலைகளின் தன்மை மற்றும் அளவை அடிப்படையாகக் கொண்டு இனப்படுகொலையின் பல வகைப்பாடுகளை அனுமதிக்கிறது. இருப்பினும், சில அறிஞர்கள் இந்த வரையறை மிகவும் பரந்ததாக இருப்பதாக விமர்சிக்கிறார்கள் மற்றும் இனப்படுகொலைக்கு நோக்கம் ஒரு அவசியமான அளவுகோலாக இருக்க வேண்டும் என்று வாதிடுகின்றனர்.




இனப்படுகொலை ஆய்வுகளில் வரையறைவாதத்தின் சவால்களில் நோக்கம் நிரூபிக்கப்பட வேண்டுமா அல்லது இனப்படுகொலையை நிறுவ விளைவுகள் மட்டுமே போதுமானதா என்பது பற்றிய விவாதங்கள் அடங்கும். இந்த விவாதம் இனப்படுகொலை நிகழ்வுகள் வகைப்படுத்தப்பட்டு புரிந்து கொள்ளப்படும் விதத்தில் தாக்கங்களைக் கொண்டுள்ளது. இனப்படுகொலையைத் தீர்மானிப்பதில் நோக்கம் ஒரு முக்கியமான காரணி என்று சில அறிஞர்கள் வாதிடுகின்றனர், ஏனெனில் இது ஒரு குறிப்பிட்ட குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பதற்கான குறிப்பிட்ட நோக்கம் அல்லது நோக்கத்தை பிரதிபலிக்கிறது. உள்நோக்கம் இல்லாமல், ஒரு நிகழ்வு இனப்படுகொலைக்கான அளவுகோல்களை பூர்த்தி செய்யாது என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

மறுபுறம், சார்னி முன்மொழிந்தபடி, இனப்படுகொலையின் ஒரு பரந்த வரையறையை ஆதரிப்பவர்கள், நோக்கத்தில் மட்டுமே கவனம் செலுத்துவது இனப்படுகொலை பற்றிய புரிதலை சுருக்கி, நிராயுதபாணியான தனிநபர்களின் பாரிய படுகொலைகளுக்கு வழிவகுக்கும் நிகழ்வுகளை விலக்கக்கூடும் என்று வாதிடுகின்றனர். நோக்கத்தைப் பொருட்படுத்தாமல், வெகுஜன படுகொலையின் சோகமான மற்றும் கொடூரமான யதார்த்தம் முதன்மை மையமாக இருக்க வேண்டும் என்றும், அத்தகைய அட்டூழியங்களைத் தடுக்கவும் தண்டிக்கவும் ஒரு வலுவான சர்வதேச பதில் தேவை என்றும் அவர்கள் வாதிடுகின்றனர்.

தமிழ் இனப்படுகொலையைப் பொறுத்த வரை, முன்மொழியப்பட்ட கருவியான "இனப்படுகொலை நிகழ்வை விவரிப்பதற்கும் வகைப்படுத்துவதற்கும் பணித்தாள்" ஒருங்கிணைப்பது புறநிலைத் தரவுகளைத் திரட்டுவதற்கும் நிகழ்வை வகைப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும். இந்த கருவி கொலைகளின் தன்மை மற்றும் அளவை மதிப்பிடுவதற்கான ஒரு கட்டமைப்பை வழங்கக் கூடும், அத்துடன் இனப்படுகொலை நடந்ததா என்பதை தீர்மானிப்பதில் பொருத்தமான நோக்கம் போன்ற பிற காரணிகளையும் வழங்க முடியும்.

எவ்வாறெனினும், எந்தவொரு இனப்படுகொலை வழக்கையும் போலவே, தமிழ் இனப்படுகொலை வழக்கையும் செயலாக்குவதில் வரையறைவாதம், அரசியல் பரிசீலனைகள், சட்டத் தடைகள் மற்றும் ஆதாரங்களைச் சேகரிப்பதிலும் சமர்ப்பிப்பதிலும் உள்ள சிரமங்கள் இன்னும் தடைகளாக இருக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த சவால்களை முறியடிப்பதற்கும் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெறுவதற்கும் கவனமாக பரிசீலிக்கவும் மூலோபாய அணுகுமுறைகளும் தேவைப்படலாம்.

முடிவாக, இனப்படுகொலையை நிறுவ நோக்கம் வெளிப்படுத்தப்பட வேண்டுமா அல்லது விளைவுகள் மட்டுமே போதுமானதா என்ற விவாதம் ஒரு சிக்கலான மற்றும் சர்ச்சைக்குரிய பிரச்சினையாகத் தொடர்கிறது. சார்னியின் முன்மொழியப்பட்ட கருவி தமிழ் இனப்படுகொலை வழக்கு உட்பட புறநிலை தரவுகளைத் திரட்டுவதற்கும் இனப்படுகொலை நிகழ்வுகளை வகைப்படுத்துவதற்கும் ஒரு வழியை வழங்கக் கூடும், ஆனால் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரும் செயல்பாட்டில் எழக்கூடிய சவால்கள் மற்றும் தடைகளை கருத்தில் கொள்வது முக்கியம். இனப்படுகொலை வழக்குகளை நிவர்த்தி செய்வதில் அறநெறி உணர்திறன், மனித உரிமைகள் மற்றும் வெகுஜன படுகொலைகளின் யதார்த்தத்தை அங்கீகரித்து பதிலளிப்பதற்கான அர்ப்பணிப்பு ஆகியவை முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

## நிந்தவூரில் உள்ள பழக்கடைகள் அனைத்திலும் திடீர் சோதனை நடவடிக்கை.



நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம். றயீஸ் அவர்களின் வழிகாட்டலில் பழக்கடைகளின் தரத்தைப் பேணும் வகையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் அனைத்து பழக்கடைகளிலும் பரிசோதனை நடவடிக்கை திங்கட்கிழமை மேற் கொள்ளப்பட்டது.

இதில் மக்களின் நுகர்வுக்கு பொருத்தமற்ற பழங்கள் மற்றும் செயற்கையாக பழங்களை பழுக்க வைப்பதற்காக பயன்படுத்தகூடிய இரசாயனங்களும் கைப்பற்றப்பட்டு அனைத்தும் அழிக்கப்பட்டன.

இவ்வாறு பழங்களை செயற்கையாக பழுக்கவைக்க பயன்படுத்தப்படும் இரசாயனம் கலந்து தெளிக்கப்பட்ட பழங்களை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அதன் இரசாயன தாக்கதின் விளைவுகளை அறியாமல் அதனை உட்கொண்டு பல நோய்களுக்குள்ளாகின்றனர்.

எனவே, இதனை தடுக்கும்பொருட்டு இவ்வாறு இரசாயனம் கலந்து தெளிப்பதனையும் இரசாயனம் தெளிப்பதற்கு பயன்படுத்தகூடிய உபகரணங்களையும் மற்றும் அழுகிய நிலையில் பழங்களையும் கண்டால் மக்கள் விழிப்புடன் இருந்து 0672250834 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தெரியப்படுத்துங்கள் என சுகாதார வைத்திய அதிகாரி றயீஸ் தெரிவித்தார்.

இப்பரிசோதனை நடவடிக்கையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம். றயீஸ், மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், மற்றும் அலுவலக ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

## தீர்வுத்திட்ட தயாரித்தலின் பின்...

"அரசியல் தீர்வுக்கான காலத்தை இழுத்தடிப்பது அரசின் நோக்கமல்ல. அந்த நோக்கம் தமிழ்த் தரப்பினருக்கும் இருக்கக் கூடாது. நாம் அனைவரும் ஒன்றுகூடி தீர்வை வென்றெடுக்க வேண்டும்."

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து நியாயமான அடிப்படையில் இதய சுத்தியுடன் செயற்படுவதாக இருந்தால் ஜனாதிபதி முதலில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து முடிவொன்றை எடுத்துவிட்டு எம்முடன் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும்.

முடிவுகள் எடுக்கப்படாது தொடர்ச்சியாக பேச்சுக்களை முன்னெடுப்பதானது காலத்தை வீணடிக்கும் செயற்பாடாகவே இருக்கும். அவ்விதமான நிலைமைகள் தொடர்ந்தால், நாம் உரிய தீர்மானத்தை எடுப்போம். அதற்காக, அரசு முன்னெடுக்கின்ற பேச்சுக்களில் பங்கேற்காமல் விடப்போவதில்லை.

நாங்களாக பேச்சுக்களை குழப்பியவர்களாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை. அதே நேரம், நியாயமான தீர்வு முன்வைக்கப்படாவிட்டால், நாம் அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே ஜனாதிபதி மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் கூறுகையில்,

"சம்பந்தனின் காலத்தில் அரசியல் தீர்வை வென்றெடுக்க வேண்டும் என்பதில் தமிழ், முஸ்லிம் தலைவர்கள் மாத்திரமன்றி சிங்களத் தலைவர்களும் உறுதியாகவுள்ளனர். இந்தநிலையில் தீர்வு தொடர்பில் ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் சம்பந்தன் வெளியிடும் கருத்துக்களை நாம் ஆழமாகச் சிந்திக்கின்றோம்.

தீர்வுத் திட்டத்தை தயாரித்துவிட்டு, பேச்சை ஆரம்பிக்கலாம் என்று சம்பந்தன் தெரிவித்துள்ள கருத்துக்கு எனது பதில் என்னவெனில் முதலில் பேச்சு மேசையில் சகல தரப்பினரும் கூடி ஆராய்ந்து தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து பேச்சைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

அரசியல் தீர்வுக்கான காலத்தை இழுத்தடிப்பது அரசின் நோக்கமல்ல. அந்த நோக்கம் தமிழ்த் தரப்பினருக்கும் இருக்கக் கூடாது. நாம் அனைவரும் ஒன்று கூடி தீர்வை வென்றெடுக்க வேண்டும்." - என்றார்.

## சிறிதரன் மீண்டும் யுத்தத்தை...

உறுப்பினர் சுதர்ஷன தெனிபிடிய குற்றம் சுமத்தியுள்ளார். நேற்று நாடாளுமன்றத்தில் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சபையில் உரையாற்றிய பின்னர் சபையில் குறிக்கிட்டு இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

சிறிதரன் நாடாளுமன்றத்தில் எப்போது உரையாற்றினாலும் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது இராசாயன குண்டுகள் வீசப்பட்டு மக்கள் கொல்லப்பட்டதாக இதனை தொடர்ச்சியாக குறிப்பிட்டு வருவதாக சுதர்ஷன தெனிபிடிய குறிப்பிட்டார்.

ஆனால் அவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் இடம்பெறவில்லை என்றும் சுதர்ஷன தெனிபிடிய குறிப்பிட்டிருந்தார்.

தற்போது வடக்குகிழக்கில் வீதிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் புதிய கட்டடங்கள் அமைக்கப்படுள்ளதாக தெரிவித்த சுதர்ஷன தெனிபிடிய தமிழ் மக்களுக்கு செய்யக்கூடிய எல்லா சேவைகளும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளாத குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் தமிழ் மக்கள் தற்போது கடந்த காலத்தை போன்ற ஒரு யுத்தம் மீண்டும் வேண்டாம் என்று குறிப்பிடுவதாக சுதர்ஷன தெனிபிடிய மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டை அமைதியாக வழிநடத்த விடுமாறும் இவ்வாறு தொடர்ச்சியாக இனப்படுகொலை அடக்குமுறை என்று கூறவேண்டாம் என்றும் சுதர்ஷன தெனிபிடிய மேலும் தெரிவித்துள்ளார்.

## இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழ...

நாடாளுமன்ற விவாதத்தின் போது உரையாற்றிய கூட்டமைப்பின் உறுப்பினர் எஸ்.சிறிதரன் குறிப்பிட்ட ஒரு சில விடயங்களை மேற்கோள்காட்டி உரையாற்றுகையில் சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

படையினரால் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று குறிப்பிடுவதை ஒருபோதும் ஏற்க முடியாது.

விடுதலை புலிகள் அமைப்பு 3 இலட்சம் தமிழர்களை பணய கைதிகளாக வைத்திருந்த போது இவர்கள் எங்கு சென்றார்கள். இன அழிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு இவர்கள் தான் தொடர்ந்து முரண்பாடுகளை ஏற்படுத்துகிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இரசாயன குண்டு தாக்குதல் பிரயோகிக்கப்படவில்லை என்றும் மூன்று இலட்சம் தமிழர்களை விடுதலை புலிகள் அமைப்பு பணய கைதிகளாக வைத்திருந்த போது எங்கு சென்றீர்கள் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடும் கருத்து அடிப்படையற்றது. யுத்தத்தில் இரசாயன குண்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிடுவது அடிப்படையற்றது.

இறுதி கட்ட யுத்தத்தின் போது இரசாயன குண்டுத்தாக்குதல் நடத்தப்படவில்லை என்பது பல அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீரே வராத மகாவலி ஆற்று...

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் மையப்படுத்தி மகாவலி ஜெ வலயம் என்ற பெயரில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினால் புதிய வலயம் ஒன்றைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது. ஏற்கனவே மகாவலி ஆற்றின் நீர் வடக்கு மாகாணத்திற்கு வருவதற்கு சாத்தியமேயில்லை என்று மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்துள்ள நிலையில் புதிதாக உருவாக்கப்படும் ஜெ வலயத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பதை அரசாங்கம் விளக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை உருவாக்குவதற்கான முயற்சியா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

நாடு சுதந்திரமடைந்த பின்பு, பல இலட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கி, அவர்களை நாடுகடத்தினீர்கள். பின்னர் இனக்கலவரங்கள் என்ற பெயரில் தென்பகுதியில் இருந்த தமிழ் மக்களைக் கொன்று, அவர்களது வியாபாரம், சொத்துகளை அழித்து, அவர்களது பூர்வீகத் தாயகமான வடக்கு-கிழக்கிற்குத் துரத்தினீர்கள். பின்னர் யுத்தம் ஒன்றைத் தொடங்கி, வடக்கு-கிழக்குத் தமிழர்களை உலகெங்கும் அகதிகளாகத் துரத்தினீர்கள். அவர்களது காணிகளைப் பறிமுதல் செய்து சிங்கள மக்களைக் குடியேற்றினீர்கள்.

இன்று தமிழ் மக்களின் பூர்வீக நிலமான முல்லைத்தீவு மணலாற்றை மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில், சிங்கள மக்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்து இதற்கு வெலிஓயா என்று பெயரையும் சூட்டியுள்ளீர்கள். மகாவலி எல் வலயம் என்று சொல்லப்படும் இந்தப் பிரதேசத்திற்கு இதுவரையில் மகாவலி நீர் எட்டிப்பார்த்ததும் கிடையாது. எட்டிப்பார்க்கப் போவதுமில்லை. மாறாக, அந்நிலங்களில் பூர்வீகமாக பயிர்செய்த தமிழ் மக்களின் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு, சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

இன்று மகாவலி எல் வலயத்திற்கே அந்நதியின் நீர் வராத நிலையில், நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக்குளம், துணுக்காய் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கி மகாவலி ஜே என்னும் புதியதோர் வலயத்தை உருவாக்குகிறீர்கள். இதுவும் எல் வலயம் போன்று சிங்களக் குடியேற்றங்களுக்கே தவிர, இங்கு மகாவலி நீர் வரப்போவது கிடையாது. இந்த புதிய வலயம் தொடங்குவதற்கு முன்பாகவே, நெடுங்கேணியில் 1000ஏக்கர் நிலத்தை சீனக்கம்பெனியின் பினாமி நிறுவனமான தாய்லாந்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றிற்கு, கரும்பு பயிருடுவதற்கு கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ள நிலங்கள் ஏற்கனவே மத்தியதர வகுப்பினருக்குப் பிரித்து வழங்கப்பட்ட நிலங்கள் ஆகும். யுத்தத்தின் காரணமாக அந்த நிலங்கள் காடுமண்டிப் போக, அவற்றை வன இலாகாவிற்குச் சொந்தமான காணிகள் எனக்கூறி, அவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்கதும் கண்டனத்திற்குரியதுமாகும். இவ்வாறான கரும்பு பயிரிடுவதற்கு எத்தனையாயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படும் என்பது யாருக்கும் தெரியாது. மணலாற்றிற்கு நேர்ந்ததுதான் நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக்குளம் போன்றவற்றிற்கும் ஏற்படும் என்பதை தமிழ் மக்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் மனதில் கொள்ளவேண்டும்.

ஏற்கனவே திருகோணமலையைச் சுற்றிவளைத்து சிங்களக் குடியேற்றத்தின் மூலம், எவ்வாறு சேருவாவில என்ற சிங்கள தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டதோ, அதே போல வவுனியாவைச் சுற்றிவளைத்து, சிங்கள குடியேற்றங்களைக் கொண்டுவருவதற்கான ஒரு திட்டமாகவே இது இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், மகாவலி அபிவிருத்தி என்பது முழுக்க முழுக்க சிங்கள குடியேற்றங்களுக்கே என்பதை தமிழ்க் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும். மிகப் பாரிய விவசாய நிலப்பரப்பைக் கொண்ட வன்னி மண்ணைப் பாதுகாப்பதன் ஊடாக தமிழ் மக்களின் விவசாயம், பொருளாதாரத்தை நிலைநிறுத்த முடியும்.

மாறாக இவற்றை வெளிநாட்டுக் கொம்பனிகளுக்கு விற்பதனூடாக அரசாங்கம் ஏதோவொரு வகையில் தான் நினைத்ததை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விவசாய நிலங்களைத் தாரை வார்ப்பதை தமிழ் மக்கள் முற்றுமுழுதாக நிராகரிப்பதுடன், வடக்கு மாகாண தமிழ் மக்களுக்கு மகாவலி அபிவிருத்தி சபை தேவையில்லை என்பதையும் அரசாங்கம் புரிந்துகொண்டு, அதனை வடக்கு மாகாணத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## பதவிக்காகவே தமிழ் தேசியம்...

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர், "தேர்தல் என்று வரும் போது அதை தாண்டிய பதவிப்போட்டி, தேர்தலை வெல்ல வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் வந்து விடுகிறது.

இதன் காரணமாக உட்கட்சி மோதல் ஆரம்பமாகி விடுகிறது. தேர்தலில் ஆசன போட்டிக்காக சண்டை இடுகின்றார்கள்.

நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்ற ஆசையில் விருப்புவாக்குகளுக்காக சண்டை இடுகின்றனர். என்னை பொறுத்தமட்டில் தமிழ் தேசியம் சார்ந்து காணப்படுகின்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்பது தான் என்னுடைய கருத்து." என தெரிவித்தார்.

## தீர்வுத்திட்ட தயாரித்தலின் பின்...

இரவு நேரத்தில் தனிநபராக நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அந்த பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை இராணுவ நடவடிக்கை மூலம் கபளீகரம் செய்து, சட்டவிரோமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்ற கோரி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் நேற்று இரண்டாவது நாளாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன் போது அங்கு வந்திருந்த பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் , இவ்விடத்தில் சட்டவிரோதமான முறையில் கூட முடியாது. அதனால் இங்கிருந்து அனைவரும் கலைந்து செல்லுமாறு பணித்தனர்.

எனினும், தமிழர்களின் பாரம்பரிய நிலத்தில் அடாத்தாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றும் வரை போராட்டத்தை தொடரவுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து, பொலிசார் பலாத்காரமாக போராட்டக்காரர்களை வாகனத்தில் ஏற்றினர். சட்டவிரோதமான முறையில் கூடி, பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்க முயன்றனர் எனும் குற்றச்சாட்டில் சட்டத்தரணி சுகாஷ், நான்கு பெண்கள் உள்ளிட்ட 09 பேரை கைது செய்தனர்.

அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தனியார் காணி ஒன்றில் நின்றிருந்த வேளை அவரை வலுக்கட்டாயமாக தூக்கி அக்காணியில் இருந்து பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

அவரை போராட்டக்களத்திலிருந்து அகற்ற பொலிசார் மேற்கொண்ட முயற்சி வெற்றியடையவில்லை. இதையடுத்து, விகாரைக்கு முன்பாக உள்ள காணியொன்றில் தங்கியுள்ள செ.கஜேந்திரன் எம்.பியை சுற்றிவளைத்து துப்பாக்கி ஏந்திய பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர். அவர் நகர முடியாமல் சுற்றிவளைக்கப்பட்டுள்ளார்.

புதர் மண்டிய காணிக்குள் தற்போது இரவு வரையும் அவர் தனியாளாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ்காவலில் வைத்திருப்பதற்காக பொலிசார் வேண்டுமென்றே இழுத்தடிப்பு செய்வதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன. கைதானவர்களிடம் இதுவரை வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லையென தெரிவித்தனர்.

# தமிழருக்கு இழைத்த அநீதியை மறைக்கவே பொதுவான நினைவு தினம்

## - வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் -

1983 இல் இருந்து 2009 வரை போரா லும் வன்முறையாலும் கொல்லப்பட்ட அனைவரையும் நினைவு கூறும் வகையில் பொது நினைவு கூறும் தின த்தை பிரகடனப்படுத்துமாறு அமைச் சரவைப் பத்திரம் ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள் ளார்.

ரணிலின் இந்த செயற்பாடு இது வரை தமிழர்களுக்கு சிங்கள ஆட்சியாளர்களி னாலும் அரச படைகளினாலும் இழை க்கப்பட்ட போர்க்குற்றங்கள், அநியாயங் கள், படுகொலைகள், இனப்படுகொலை கள் போன்றவற்றுக்கான நீதி கிடைப் பதை தடுப்பதற்காகவும் குற்றம் இழை த்தவர்களை பாதுகாப்பதற்கும் அரசாங் கத்திற்கு ஏற்படும் சர்வதேச அழுத்தங் களில் இருந்து தப்பிக் கொள்வதற்குமாக



இந்த பொது நினைவு தினம் என்ற நாட கத்தை அரங்கேற்றவுள்ளார்.

14 ஆண்டு முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் தினத்தில் கனடா பிரதமரின் நினைவு கூறல் அறிக்கை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒரு மன ஆறுதலை கொடுத்த சம நேரம் சிங்கள ஆட்சி யாளரின் போலி முகத்திரையை வெளி ப்படுத்தியுள்ளது இதனால் தனித் தனி யான நினைவேந்தல்களை நிறுத்த புதிய உத்தியை கையில் எடுத்துள்ளார் ஜனாதிபதி ரணில்.

தமிழர்களுக்கு பொது நினைவு தினம் ஏற்புடையது இல்லை காரணம் ஒவ் வொரு நினைவேந்தல் தினங்களும் தனித் தனியான வரலாற்றுப் பின்ன ணியை கொண்டவை அத்துடன் அவற் றுக்கான நீதி இதுவரை கிடைக்க வில்லை எனவே ரணிலில் விக்கிரம சிங்காவின் பொது நினைவேந்தல் தினம் தமிழர்கள் மீது திணிக்கப்படு மாயின் அச் செயற்பாடு மீண்டும் ஒரு தமிழின அழிப்பாகவே அமையும்.

# கிழக்கு மாகாணத்தில் 55

## பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்!



கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு வழங்கும் நோக்கில் முதல் கட்டமாக 55 பட்டதாரி களுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களால் ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி யில் இந் நிகழ்வு நேற்று (23) இடம்பெற்றது. இதன் போது அங்கு கருத்து வெளியிட்ட ஆளுநர் செந்தில் தொண்டமான்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் போக்கு வரத்து கட்டணங்கள் மிகவும் உயர்வாக உள்ளன. இத னால் நியமனம் வழங்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களு க்கும் அவர்களின் நலன்கருதி இருப்பிடங்களுக்கு அருகா மையில் உள்ள பாடசாலைகளில் வெற்றிடங்கள் இருக்கு மானால் அங்கு கடமைக்கு அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் எதிர்வரும் ஓராண்டில் 10 பட்டதாரி ஆசிரி யர்களை உருவாக்கும் வகையில் அர்ப்பணிப்புடன் பணி யாற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் குறித்த நிகழ்வில் , பாராளுமன்ற உறுப்பினர் விம லவீர திசாநாயக்க,ஆளுநரின் செயலாளர்,மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் , அரச உத்தியோகஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தங்கம் கடத்தி மாட்டிக்கொண்ட அலி சப்ரி



சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு தங்கம் உள்ளிட்ட பொருட்களை கொண்டு வந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹிமிடம் தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக இலங்கை சுங் கத் திணைக்களத்தின் வருமான கண் காணிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹிம் சட்டவிரோதமான முறையில் 3 கிலோ 397 கிராம் எடையுடைய தங்க த்தை கொண்டு வந்த நிலையில், கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத் தில் வைத்து நேற்று கைது செய்யப் பட்டிருந்தார்.

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினரிட மிருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 74 மில்லியன் ரூபா என கணி ப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, பாரா ளுமன்ற உறுப்பினரின் பயணப் பையி லிருந்து ஒரு தொகை கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டு ள்ளதாக சுங்கத் திணைக்கள அதிகாரி கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு 91 ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ள துடன், அதன் சந்தை பெறுமதி 4.2 மில்லியன் ரூபா என கணிப்பிடப்பட்டு ள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர், விமான நிலையத்தில் ஐந்து மணிநேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், சுங்கத் திணைக்களத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

டுபாயிலிருந்து நேற்று முற்பகல் 9.45 அளவில் வருகைத் தந்த விமானத்தின் மூலம், பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹிம் நாட்டிற்கு வருகைத் தந்து ள்ளார். இவ்வாறு வருகைத் தந்த பாரா ளுமன்ற உறுப்பினர், விசேட பிரமுகவ ர்கள் பிரவேசிக்கும் நுழைவாயிலின் ஊடாக நாட்டிற்குள் பிரவேசிக்க முயற் சித்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட் டுள்ளார்.

தமது கிடைக்கப் பெற்ற தகவலொன்று க்கு அமையவே, பாராளுமன்ற உறுப்பி னர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள தாக சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்ற னர்.

# மன்னாரில் கோர விபத்து...! சாரதி மரணம்..!

## ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் படுகாயம்..!



மன்னார் பிரதான பலத்திற்கு அருகில் நேற்று (23) காலை 11 மணியளவில் மகேந்திரா ரக வாகனம் மற்றும் முச்சக்கர வண்டி மோதி இடம் பெற்ற கோர விபத்தில் ஒரே குடும்ப த்தை சேர்ந்த ஐவர் பலத்த காயங்களுடன் மன்னார் பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் முச் சக்கரவண்டி சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள் ளார்.

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த கணவன் மனைவி உட் பட 9 வயது,6 வயது,4 வயதுடைய மூன்று குழந்தைகள் உள்ளடங்களாக ஐவர் நாளைய இடம் பெறவுள்ள திருமண நிகழ்வு ஒன்றிற்கான முச்சக்கர வண்டி ஒன்றில் மன்னார் வருகை தந்த நிலையில் மன்னாரில் இருந்து தள்ளாடி நோக்கி பயணித்த மஹேந்திரா ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கரவண்டியில் மோதிய நிலையில் முச்சக்கர வண்டி சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்

அதே நேரம் பலத்த காயங்களுடன் ஏனையோர் மன்னார் பொது வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கிளிநொச்சியில் ஒரு நோய்க்கு வைத்தியசாலை

## சென்ற பெண்ணுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை



கிளிநொச்சி-பளை வைத்தியசாலை யில் பல குறைபாடுகள் காணப்படுவ தாக அங்கு சிகிச்சை பெற்ற பெண் ஒரு வர் குற்றம் சாட்டியுள்ளார். மழையில் நனைந்தமையால் காய்ச்சல், சளி ஏற் பட்டுள்ள நிலையில் அவர் பளை வைத் தியசாலைக்கு சிகிச்சை பெற சென்றுள் ளார்.

இந்நிலையில் ஒரு நோய்க்காக வைத்தி யசாலை சென்ற குறித்த பெண் இன்று பல நோய்களில் அவதியுறுவதாக அவர் ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவித்துள் ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், “நான் கடந்த மாதம் மழையில் நனைந்ததால், காய்ச்சல், சளியில் பாதிக்கப்பட்டேன். இதனால் என்னால் சரியாக மூச்சுவிட முடியவி ல்லை. நான் சாப்பாடு கடை ஒன்றை நடத்தி வருவதுடன், சுமார் 50 பேரிற்கு சமைத்து கொடுத்து வருகின்றேன். எனவே சளி, இருமலுடன் வேலை செய்ய முடியாது.

இதனால் பளை வைத்தியசாலைக்கு சென்று காய்ச்சலுக்கு மருந்து எடுத் தேன். அவர்கள் ஒரு மாத்திரை கொடுத் தார்கள். அதை 5 நாள் குடித்தேன். பின் னர் எனக்கு சாதாரண சளி, இருமல் வெகுவாக அதிகரித்து, காய்ச்சல் வந் தது. இதனால் எனக்கு மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டது. எனவே நான் பளை வைத்தியசாலைக்கு மீண்டும் சென்ற போது, நானே கூறினேன் மருந்து குடி த்த பிறகு எனக்கு மிகவும் உடல்நிலை மோசமாகிவிட்டது என பின்னர் அவர் கள் நான் குடித்த மருந்து தேவையி ல்லை என குப்பையில் வீசிவிட்டு வேறு மருந்து தந்தார்கள்.

ஆனால் நான் அச்சத்தில் அந்த மரு ந்தை குடிக்கவில்லை. பின்னர் எனக்கு உடம்பில் வருத்தம் அதிகரிக்க யாழ். வைத்தியசாலைக்கு சென்ற போது என க்கான நோய் நிர்ணய அட்டையை அவர்கள் கேட்டார்கள். அதை நான் பளை வைத்தியசாலையில் கேட்ட போது. அதை எழுதி தருவதற்கு தாதியர் இல்லை என தெரிவித்தனர்.

பின்னர் நான் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டேன்.எனது பிள்ளை களை தனியாக விட்டு சென்றேன். என க்கு 3 பிள்ளைகள். இதுதான் நோய் கார ணமாக நான் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்ட முதல் சந்தர்ப்பம். என க்கு எந்த நோயும் இருக்கவில்லை. இப் போது மூட்டு வாதம், புற்றுநோய் பரி சோதனை, உளநல சோதனை என பல சோதனைகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் எனது உறவினரை அனுப்பி நான் மறுபடியும் நோய் நிர்ணய அட்டையை கேட்ட போது அவர்கள் தரவில்லை. இப்போது நானே நேரில் வந்து மறுபடி கேட்கும் போது யாழ்.வைத்தியசாலைக் கு தொலைபேசியில் கதைப்பதாக கூறினா ர்கள். பின்னர் எனக்கு வழங்கப்படாத மருந்துகளை நோய் நிர்ணய அட்டை யில் எழுதி கொடுத்தார்கள். இதனை அவதானித்து, அந்த நோய் நிர்ணய அட்டையை ஏற்க முடியாது என கூறி னேன். இவ்வாறு நான் கேட்டதற்கு, பிர ச்சினை செய்வதாக கூறி, பொலிஸாரு க்கு அறிவித்துள்ளனர். இதனால் தான் நான் ஊடகத்தை நாடினேன்.”என கூறி யுள்ளார்.

# விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு



விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் கடூழிய வேலையுடன் கூடிய ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

தங்கவேலு நிமலன் என்ற நபருக்கு இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்துவதற்காக வெடி பொருட்கள் மற்றும் 2 மைக்ரோ ரக கைத்துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு இரத்மலானை பிரதேசத்தில் இரண்டு மைக்ரோ பிஸ்டல்கள், 1 1/2 கிலோ C-4 ரக உயர் வெடி மருந்துகள் மற்றும் தோட்டாக்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பிரதிவாதிக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். நீண்ட விசாரணையின் பின்னர் தீர்ப்பினை அறிவித்த மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொடவத்த, பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அதன்படி, குற்றவாளிக்கு கடூழிய வேலையுடன் கூடிய ஆயுள் தண்டனை விதிக்கப்படுவதாக தீர்ப்பினை வழங்கியிருந்தார்.

# பிரான்ஸில் முள்ளிவாய்க்கால் தினம் அனுஷ்டிப்பு




முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்த மே 18 ஆம் திகதி உலகம் முழுதும் வசிக்கும் தமிழ் மக்களால் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது

அந்தவகையில் இம்முறை முள்ளிவாய்க்கால் தினத்தை ஒட்டி பிரான்சின் பரிஸ் நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது ஈழத்தமிழர்களுக்காக நீதியை வழங்கி இனப்படுகொலையாளிகளை தண்டிப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது. குறித்த ஆர்ப்பாட்டத்தில் பலர் கலந்து கொண்டனர்.

## அபிவிருத்திக்குழு கூட்டங்க...



அந்த வகையில் அவரின் எதிர்ப்பை நாங்கள் வரவேற்கிறோம். எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரை நீக்குவது தொடர்பான மசோதா வருகின்ற போது தமிழ் தேசிய கூட்டமைப்பும், ஏனைய தமிழ் கட்சிகளும் இணைந்து இந்த விடயம் தொடர்பாக ஒரு முடிவெடுப்போம்.

விலைவாசி அதிகரிப்பின் போது அவர் மக்கள் சார்பாக நின்றவர். எனவே பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவருக்கு ஆதரவு வழங்கும் சூழல் உருவாகும். எனவே நாம் கூடி இறுதி முடிவெடுத்து அவருக்கு ஆதரவாக செயற்படுவதே சாலச்சிறந்தது.

அத்துடன் வவுனியா பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் நாம் கலந்து கொள்வதில்லை என தெரிவிக்கப்படுகின்றது. உண்மையில் பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் நடைபெறும் நேரங்களில் கொழும்பில் முக்கிய சந்திப்புக்கள், இடம்பெறும் போது அதில் கலந்து கொள்ள முடியாத சூழல் ஏற்படுகின்றது.

எம்மிடம் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளதுடன் வினோநோகராதலிங்கம் பெரும்பாலான கூட்டங்களில் தனது பங்களிப்பை செய்துள்ளார். அத்துடன் முழுமையாக நாங்கள் பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களை தவிர்ப்பதில்லை. இனிவரும் கூட்டங்களில் நாங்கள் கலந்து கொள்வோம்.

அபிவிருத்திக்குழு என்ற போர்வையில் ஒரு விடயம் முடிவாக எடுக்கப்படாமல், காலம் தாழ்த்தப்படுகின்றது. முதலில் தீர்மானமாக எடுப்போம், பின்னர் ஜனாதிபதிக்கு கொடுப்போம் என்றவாறே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது.

மாறாக மக்கள் நலன் சார்ந்த விடயங்களிற்கு உடனடியாக முடிவெடுக்கப்படுவதில்லை. அத்துடன் இக்கூட்டங்களிற்கு திணைக்கள அதிகாரிகள் கூட கலந்து கொள்வதில்லை. எனவே கூட்டங்களின் போது முடிவெடுக்க வேண்டிய விடயங்களுக்கு அன்றைய தினமே முடிவெடுத்தாக வேண்டும்.

அதற்காக நாங்கள் நிச்சயமாக குரல்கொடுப்போம். வெறும் கூட்டமாக இல்லாமல், அதிகாரிகள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை அபிவிருத்திக்குழு தலைவர் ஏற்படுத்த வேண்டும்.

அதிகாரிகள் வராவிட்டால் அவ்விடயம் முடிவு எட்டமுடியாத நிலை ஏற்படும். எனவே அபிவிருத்திக்குழு தலைவர் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

# பெருந்தோட்ட மக்கள் வாழும் 102
## பிரதேச செயலகப் பெயர்ப் பட்டியல் கையளிப்பு!



பெருந்தோட்ட மக்கள் வாழும் 102 பிரதேச செயலகப் பெயர்ப் பட்டியல், நிதி அமைச்சுக்கும் உலக வங்கிக்கும் கையளிக்கப்பட்டுள்ளது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், "மத்திய, மேல், சப்ரகமுவா, ஊவா, தென், வயம்ப ஆகிய 6 மாகாணங்களின் பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு (அவிசாவளை), களுத்துறை, குருநாகல், காலி, மாத்தறை ஆகிய 12 மாவட்டங்களில் அமைந்துள்ள 102 பிரதேச செயலகப் பிரிவுகளில் பெருந்தோட்டத் துறை அமைந்துள்ளது. இந்த பிரதேச செயலக பெயர் பட்டியலை, “ஆறுதல்“ (அஸ்வெசும) என்ற நலன்புரி திட்டத்துக்குப் பொறுப்பான நிதி இராஜாங்க அமைச்சுக்கும், இந்தத் திட்டத்துக்கு நிதி உதவி வழங்கவுள்ள உலக வங்கிக்கும், இன்று அனுப்பியுள்ளேன்.

மலையகத் தமிழர் என்றால் நுவரெலிய மாவட்டத்தில் வாழும் மக்கள் மட்டுமல்ல. அதுபோன்று, பெருந்தோட்ட மக்கள் என்றால் அது நுவரெலிய மாவட்டத்தில் வாழும் மக்கள் மட்டுமல்ல. நுவரெலியா முதல் கொழும்பின் அவிசாவளை, பாதுக்கை வரை 12 மாவட்டங்களில் பெருந்தோட்டங்கள் அமைந்துள்ளன. அதேவேளை இந்த நலன்புரித் திட்டம், தோட்ட தொழிலாளருக்கு மாத்திரம் வழங்கப்படும் ஒரு திட்டமும் அல்ல. ஆகவே, பெருந்தோட்டங்களில் எத்தனை பேர் தொழிலாளர்கள் என்ற கணக்கு இங்கே அவசியமில்லை.

இன்று பெருந்தோட்டங்களில் வாழும் மக்களில், பெரும்பான்மையோர் தோட்டத்தொழிலாளர் அல்ல. ஆகவே, பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களை, அவர்கள் அங்கே தொழில் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, வறுமை நிலைமையை மாத்திரம் கணக்கில் எடுத்து, அவர்களுக்கு நலன்புரி திட்டத்தில் இணைந்துக்கொள்ள வாய்ப்பு வாய்ப்பு வேண்டும்.

நாட்டின் ஏனைய சமூக குடும்பங்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் எமது குடும்பங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். எமது இந்த நிலைப்பாட்டை உலக வங்கியும், நிதி இராஜாங்க அமைச்சும் ஏற்றுக்கொண்டுள்ளன. நாட்டின் வறுமை அதிகமான மாவட்ட ங்களில், மலையகம் மற்றும் பெருந்தோட்ட மக்கள் அதிகமாக வாழும் நுவரெலியா மாவட்டம் முதல் வரிசையில் உள்ளது. இந்நிலையில், இதுவரை சேகரிக்கப்பட்ட பெருந்தோட்டதுறை சார்ந்த தரவுகளில், மாவட்டத்தின் பெருந்தோட்ட ஜனத்தொகை விகிதாசாரம் சரியாகப் பொருந்தவில்லை. நேற்று முன்தினம் நிதி இராஜாங்க அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, அமைச்சர் செஹான் சேமசிங்க எமக்கு வழங்கிய தரவுகளில் இது தெரிந்தது.

ஆகவே, நுவரெலியா மாவட்டத்திலேயே இன்னமும் விண்ணப்பிக்காத பெருந்தோட்ட மக்கள் இருக்கிறார்கள். அதே போல்தான் ஏனைய மாவட்டங்களில் நிலைமை நிலவுகிறது. இதை சரி செய்து நாட்டின் ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள், எமது மக்களுக்கும் பாரபட்சமின்றி வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே தமிழ் முற்போக்குக் கூட்டணி போராடுகின்றது. உலக வங்கி, நிதி அமைச்சு, ஜனாதிபதி ஆகிய தரப்புகளுடம் நாம் தொடர்ந்து பேசுகிறோம் என்பதைப் புரிந்துக்கொள்ளாமல், சம்பந்தப்பட்ட விடயத்தில் தெளிவும் இல்லாமல் இது பற்றி பேசி இதை யாரும் குழப்பக் கூடாது.

இனி நாம் செய்யவேண்டியது பற்றிய தெளிவு இருக்க வேண்டும். நலன்புரி உதவிக்கு விண்ணப்பிக்க, பெருந்தோட்ட பிரதேசங்களில் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் வாய்ப்பு வேண்டும். 102 பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள பெருந்தோட்ட துறையில் இது நிகழ வேண்டும். ஒரு வீட்டில் வசிக்கும், திருமணமான வெவ்வேறு குடும்பங்களையும் வெவ்வேறாக கணக்கெடுக்க வேண்டும்.

வழங்கும் நிதி உதவி, பெருநர்களின் வங்கி கணக்குகளுக்கு நேரடியாக வைப்பு செய்யப்பட வேண்டும். வங்கி கணக்கு இல்லாதவர்களுக்கு அரசு வங்கிகளில் உடனடியாக விதிகளை தளர்த்தி கணக்குகள் ஆரம்பிக்க இடந்தர வேண்டும். “ஆறதல்“ (அஸ்வெசும) என்ற நலன்புரி திட்டத்தில் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு, அரசியல் கட்சிகளுக்கு, தொழிற்சங்கங்களுக்குத் தேவையின்றி தலையிட இடம் கொடுக்க கூடாது. அவ்வளவுதான்." - என்றார்.

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதில்...

கேள்விக்கு பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட 20 பேர் தற்போது, 14 வருடங்களுக்கும் மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ர்ஸ் நிர்மல நாதன் வலியுறுத்தியிருந்தார்.

யுத்தம் நிறைவடைவதற்கு முன்னர் கைது செய்யப்பட்ட 30க்கும் மேற்பட்டவர்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களில் சிலரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தற்போது 22 பேரே சிறைச்சாலைகளில் இருப்பதாக வும் அமைச்சர் தெரிவித்தார்.

விசாரணைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, அவர்களில் சிலர் நீண்ட காலமாக காவலில் வைக்கப்பட்டுள்ளதை இராஜாங்க அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

எஞ்சியுள்ள கைதிகளின் வழக்குகளை விரைவுபடுத்துவதற்கு ஏற்கனவே சட்டமா அதிபருடன் கலந்துரையாடல் நடத்தப்பட் டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

